# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 328 | 4 Pages | 30.6.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 328 | 4 பக்கங்கள் | 30.6.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## பட்டாசு ஆலை வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி : முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜூன் 30

சாத்தூர் அருகே பந்துவார்பட்டி கிராமத்தில் பட்டாசு தயாரிக்கும் ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி வழங்கிட முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், பந்துவார்பட்டி கிராமத்தில் இயங்கி வரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு தயாரிக்கும் ஆலையில் இன்று (2906 2024) காலை எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் அச்சங்குளம் கிராமத்தைச் சேர்ந்த ராஜ்குமார் (வயது 45), நடுச்சூரங்குடியைச் சேர்ந்த மாரிச்சாமி (வயது 40), வெம்பக்கோட்டை பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் (வயது 35) மற்றும் மோகன் (வயது 30) ஆகியோர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாத்தூர் அருகே பட்டாசு ஆலையில் வெடிவிபத்து: 4 பேர் பலி



விருதுநகர், ஜூன் 30

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகில் உள்ள அச்சங்குளத்தைச் சேர்ந்த சகாதேவன். இவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை பந்துவார்பட்டி கிராமத்தில் உள்ளது.

இந்த பட்டாசு ஆலை மாவட்ட வருவாய் அலுவலரின் உரிமம் பெற்று சிறிய ரக பட்டாசுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த பட்டாசு ஆலையில் 15க்கும் மேற்பட்ட அறைகளில் 50க்கும் மேற்பட்டோர் பட்டாசு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இந்த ஆலையில் வழக்கம்போல பட்டாசு தயாரிக்க ஆயத்தப் பணியாக பட்டாசு மருந்துகள் கலக்கும் பணியில் அச்சங்குளம் மற்றும் நடுச்சூரங்குடியைச் சேர்ந்த 4 பேர் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது பட்டாசு மருந்து ஊராய்வினால் வெடி விபத்து ஏற்பட்டது. இந்த வெடி விபத்தில் பட்டாசு ஆலையில் 3க்கும்மேற்பட்டஅறைகள்இடிந்து தரைமட்டமாயின. மேலும், இந்த பட்டாசு ஆலை வெடிவிபத்தில் 4 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். தகவலறிந்து வந்த போலீசார், தீயணைப்பு மீட்புக்குழுவினர் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நீட் தேர்வுக்கு எதிராக தீர்மானம்; நடக்காத விஷயத்தை திரும்பத் திரும்ப சொல்கிறார்கள்: நயினார் நாகேந்திரன்



சென்னை, ஜூன் 30

தமிழக சட்டப்பேரவையில், நீட் தேர்வுக்கு எதிராக முதல்அமைச்சர் கொண்டு வந்த தனித்தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு செய்தனர். இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பா.ஜ.க சட்டமன்ற குழு தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியதாவது;

"நீட் தேர்வுக்கு எதிராக ஏற்கனவே தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் திருப்பி அனுப்பப்பட்ட நிலையில், 2வது முறையாக தீர்மானம் போடுவது, நடக்காத விஷயத்தை திரும்பத் திரும்ப சொல்வது போல் உள்ளது. நீட் தேர்வு விவகாரத்தில் அரசியல் செய்கிறார்கள். இதை ஏற்க இயலாது.

ஏழை எளிய மாணவர்கள் மருத்துவ படிப்பு படிப்பதற்கு வசதியாக நீட் தேர்வு இருக்கிறது. எனவே நீட் தேர்வு வேண்டும். தமிழ்நாட்டில் பிளஸ் 2 தேர்வில் சில இடங்களில் வினாத்தாள் கசிந்த சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அதற்காக பிளஸ் 2 தேர்வை ரத்து செய்துவிட்டார்களா?" இவ்வாறு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

## மருத்துவத்துறை காலி பணியிடங்களுக்கு விரைவில் தேர்வு: அமைச்சர் மா.சுப்பிரமணியன்



சென்னை, ஜூன் 30

2024ம் ஆண்டில் மருத்துவத்துறையில் 21 பிரிவுகளில், 3,645 பணியிடங்களைநிரப்புவதற்கான தேர்வுகள் வரும் டிசம்பருக்குள் நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக சட்டசபையில் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.அவர் சட்டசபையில் தாக்கல் செய்த கொள்கை விளக்கக் குறிப்பில் கூறியிருப்பதாவது,

உதவி மருத்துவர் (பொது) பதவியில் உள்ள 2,553 பணியிடங்கள், உதவி மருத்துவ அலுவலர் (சித்தா) பதவியில் உள்ள 26 பணியிடங்கள், மருந்தாளுநர் பதவியில் உள்ள 425 இடங்கள், கிராம சுகாதார செவிலியர்/ தாய்மை துணை செவிலியர் பதவியில் உள்ள 367 இடங்கள், கண் மருத்துவ உதவியாளர் பதவியில் உள்ள 100 இடங்கள், மருந்தாளுநர் (சித்தா) பதவியில் உள்ள 49 இடங்கள், உள்ளிட்ட 21 வகை பதவிகளில்காலியாகஉள்ள3,645 இடங்களை நிரப்புவதற்கான தேர்வுகளை வரும் டிசம்பருக்குள் நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்து தேர்வுகளிலும், கட்டாய தமிழ்மொழி தகுதித்தாள் இடம்பெறும். தேர்வுகளை நெறிப்படுத்தி, வலுவான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒளிவுமறைவற்ற வகையில் தேர்வுகளை நடத்தி முடிக்க மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாலத்தீவில் அதிபருக்கு பில்லி சூனியம் வைத்ததாக பெண் மந்திரி கைது



மாலே, ஜூன் 30

அண்டை நாடான மாலத்தீவின் சுற்றுலா துறை மந்திரி பாத்திமா ஷாம்னாஸ் சலீம். இவரது கணவர் ஆதம் ரமீஸ் அதிபர் மாளிகையில் மந்திரிக்கு இணையான பதவி வகித்து வருகிறார். இந்தநிலையில் அதிபர் முகமது மொய்சுவுக்கு பாத்திமா பில்லி சூனியம் வைத்ததாக அவர் மீது புகார் கூறி அவரது வீட்டுக்குச் சென்ற போலீசார் அங்கு தீவிர சோதனைநடத்தினர். அப்போது சந்தேகத்துக்குரிய பல பொருட்கள் அங்கு கண்டறியப்பட்டன. அவற்றை கைப்பற்றிய போலீசார் பாத்திமா ஷாம்னாஸ், ஆதம் ரமீஸ் உள்பட 4 பேரை கைது செய்தனர்.

இதற்கிடையே பாத்திமா ஷாம்னாஸ், ஆதம் ரமீஸ் ஆகியோரை பதவி நீக்கம் செய்து அதிபர் மாளிகை உத்தரவிட்டது. மாலத்தீவு சட்டத்தின்படி பில்லி சூனியம் வைப்பது தண்டனைக்குரிய குற்றம் ஆகும். எனவே அவர்களுக்கு 6 மாதம் வரை சிறை தண்டனை விதிக்க வாய்ப்புள்ளது.

அதிபருக்கு பில்லி சூனியம் வைத்ததாக பெண் மந்திரி கைது செய்யப்பட்ட சம்பவம் மாலத்தீவு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## பாகிஸ்தானில் வெயிலுக்கு பலி எண்ணிக்கை 550ஐ தாண்டியது



இஸ்லாமாபாத், ஜூன் 30

பாகிஸ்தானில் கடந்த 6 நாட்களில் வெயிலுக்கு பலியானோரின் எண்ணிக்கை550ஐதாண்டியது.இதனால்அங்குள்ளசிந்துமாகாணத்தில் சுகாதார அவசர நிலை அறிவிக்கப்பட்டு உள்ளது.

பாகிஸ்தானில் கடந்த சில நாட்களாக கடுமையான வெப்ப அலை வீசுகிறது. குறிப்பாக அங்குள்ள சிந்து மாகாணத்தில் 50 டிகிரி செல்சியசை தாண்டி வெயில் கொளுத்துகிறது. இது கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அதிகபட்ச வெயில் அளவு ஆகும்.

எனவே பொதுமக்கள் தேவையின்றி வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என அரசாங்கம் அறிவுறுத்தி உள்ளது. அதேசமயம் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவதால் மக்கள் சொல்லொணாதுயரத்தை அனுபவித்து வருகின்றனர்.

இதற்கிடையே அதிக வெயில் காரணமாக பலருக்கு நீரிழப்பு, காய்ச்சல், மூச்சுத்திணறல் போன்றவை ஏற்பட்டன. குறிப்பாக முதியவர்கள் இதில் பெருமளவில் பாதிக்கப்பட்டனர்.

எனவே அவர்கள் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் சிகிச்சை பலனின்றி 568 பேர் கடந்த 6 நாட்களில் பலியாகி உள்ளனர். மேலும் பலர் சிகிச்சை பெற்று வருவதால் பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது.

இதனையடுத்து சிந்து மாகாணத்தில் சுகாதார அவசர நிலை அறிவிக்கப்பட்டது. இதனால் டாக்டர், நர்சு உள்ளிட்ட சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட விடுப்பை அரசாங்கம் ரத்து செய்துள்ளது.

மேலும் வெயிலால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ராணுவம் தற்காலிகசிறப்புமருத்துவமுகாம்களையும்அமைத்துநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறது.

## சீனா செல்ல வேண்டாம்: தைவான் அரசாங்கம் எச்சரிக்கை




தைபே நகரம், ஜூன் 30

சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்து தைவான் 1949ம் ஆண்டு தனிநாடாக பிரிந்தது. ஆனால் சமீப காலமாக தைவானை மீண்டும் தன்னுடன் இணைத்துக் கொள்ள சீனா துடிக்கிறது. மேலும் தைவானுடன் வேறு எந்த நாடுகளும் தூதரக உறவு வைத்துக்கொள்ளக்கூடாது எனவும் சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது. இதற்கிடையே தைவான் எல்லையில் போர் விமானங்கள் மற்றும் கப்பலை அனுப்பி சீனா பதற்றத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் தைவான் ஜனநாயகத்தை ஆதரித்து வருபவர்களை தூக்கிலிடுமாறு வலியுறுத்தி இருப்பதாக கூறப்படுகிறது.

இதனையடுத்து சீனா மற்றும் அதன் தன்னாட்சி பிராந்தியங்களான ஹாங்காங், மக்காவோ ஆகிய பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்கும்படி தைவான் நாட்டினருக்கு அரசாங்கம் அறிவுறுத்தி உள்ளது. தைவான் நாட்டைச் சேர்ந்த லட்சக்கணக்கானோர் சீனாவில் வசித்து வருகின்றனர். எனவே இரு நாடுகள் இடையே தினமும் நேரடி விமானங்கள் இயக்கப்படுகின்றன. இந்தநிலையில் தைவான் அரசின் இந்த அறிவிப்பு அங்குள்ள மக்களுக்கு ஒருவித அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

## காட்டுயானை ஆற்றைக் கடந்தபோது வெள்ளம் அடித்துப் போனது: கடும் போராட்டத்துக்கு பிறகு கரை ஏறியது



கூடலூர், ஜூன் 30

நீலகிரி மாவட்டம் கூடலூர், பந்தலூர் தாலுகா பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது. கடந்த 3 நாட்களாக கனமழை பெய்து வருவதால், ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. சில இடங்களில் மண் சரிவு ஏற்பட்டு வருகிறது. கூடலூர், ஓவேலி வனப்பகுதியில் காட்டு யானைகள் உள்பட பல்வேறு வனவிலங்குகள் உள்ளன.

இந்தநிலையில் கூடலூர் தாலுகா ஓவேலியில் கேரளாவுக்கு செல்லும் குண்டம்புழா ஆற்றை நேற்று முன்தினம் 4 காட்டு யானைகள் கடக்க முயன்றது. அப்போது ஒரு காட்டு யானையை வெள்ளம் அடித்து சென்றது. இருப்பினும், யானை வெள்ளத்தை சமாளித்தவாறு ஆற்றை கடக்க முயன்றது.

ஆனால், தண்ணீரின் வேகம் அதிகமாக இருந்ததால் ஒரு கட்டத்தில் காட்டு யானையால் ஆற்றை கடக்க முடியவில்லை. இதனால் 100 அடி தூரம் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டது. மேலும் தண்ணீரில் மூழ்கிய காட்டு யானை தும்பிக்கையை மட்டும் உயர்த்தியவாறு, நம்பிக்கையுடன் வெள்ளம் போன போக்கில் சென்றது. பின்னர் பல கட்டமாக போராடி காட்டு யானை ஆற்றை கடந்து கரையோரம் வந்தது.

அப்போது மற்ற காட்டு யானைகள் ஆற்றில் அடித்து செல்லப்பட்ட யானையை எதிர்பார்த்து ஆற்றின் கரையோரம் நின்று கொண்டிருந்தன. தொடர்ந்து அவை கரையேறிய காட்டு யானையுடன் வனப்பகுதிக்குள் சென்றன. இந்த காட்சியை ஆற்றின் கரையோரம் இருந்த சில வாலிபர்கள் தங்களது செல்போனில் வீடியோ எடுத்தனர். காட்டு யானை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிர் தப்பிய நெஞ்சை பதை பதைக்க வைக்கும் வீடியோ காட்சி சமூக வலைத்தளத்தில் வைரலாக பரவி வருகிறது.

## திருச்செந்தூரில் மீண்டும் கரை ஒதுங்கிய ஜெல்லி மீன்கள்: பக்தர்கள் கவனமுடன் புனித நீராட அறிவுறுத்தல்



திருச்செந்தூர், ஜூன் 30

திருச்செந்தூர் கோவில் கடற்கரையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஜெல்லி மீன்கள் அதிகளவு கரை ஒதுங்கின. இந்த வகை மீன்கள் உடலில் பட்டால் அந்த இடத்தில் அரிப்பு ஏற்பட்டு தீக்காயம் போல் மாறிவிடுகிறது. இதனால் பக்தர்கள் பாதுகாப்புடன் நீராட கோவில் நிர்வாகம் எச்சரிக்கை செய்தது. இதுகுறித்து பக்தர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், அதற்குரிய மருந்துகளும் கோவில் முதலுதவி மையத்தில் இருப்பு வைக்கப்பட்டது. பின்னர் ஜெல்லிமீன்களின் வருகையும் குறைந்து காணப்பட்டது.

இந்தநிலையில் நீண்ட நாட்களுக்கு பிறகு நேற்று காலை 6 மணி முதல் கடற்கரையில் அதிக அளவு ஜெல்லி மீன்கள் மீண்டும் கரை ஒதுங்கின. சுமார் 30க்கு மேற்பட்ட ஜெல்லி மீன்கள் கரை ஒதுங்கியதால் அங்கு பணியில் இருந்த கோவில் கடற்கரை பாதுகாப்பு பணியாளர்கள் உடனடியாக கோவில் நிர்வாகம் மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

கோவில் இணை ஆணையர் கார்த்திக், மீன்வளம் மற்றும் மீனவ நலத்துறை தூத்துக்குடி மாவட்ட உதவி இயக்குனர் புஷ்ரா ஷபனம், இன்ஸ்பெக்டர் சுப்பிரமணியன் ஆகியோர் வந்து கரை ஒதுங்கிய ஜெல்லி மீன்களை ஆய்வு செய்தனர். அப்போது மீன்வளத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

"பொதுவாக ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இந்த வகையான செஞ்சொறி ஜெல்லி மீன்கள் மன்னார் வளைகுடா கடல் பகுதிகளில் கடல் நீரின் திசை மாறுபாட்டிற்கு ஏற்ப வருகிறது. இது கொட்டும் தன்மையுடைய ஜெல்லி மீன்களாகும். ஆதலால் நீரில் இருக்கும் போதோ அல்லது கடற்கரை பகுதிகளில் கிடந்தாலோ அவற்றை கையினால் தொடுதல் கூடாது. அவற்றை அறியாமல் தொடுவதால் ஏற்படும் எரிச்சல் மற்றும் காந்தலை குறைக்க வினிகரை காயம் ஏற்பட்ட பகுதியில் சுமார் ஒரு நிமிடம் தெளிக்க வேண்டும். பின்னர் கலமைன் அல்லது கலட்ரைல் மருந்தினை உடனடியாக தடவினால் 24 மணி நேரத்திற்குள் காயம் சரியாகிவிடும்."

இவ்வாறு அவர்கள் கூறினர்.

மேலும் கரை ஒதுங்கிய ஜெல்லி மீன்கள் உடனடியாக அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வள்ளி கோவில் கடல் பகுதியில் விடப்பட்டன. மேலும் பக்தர்கள் கவனமுடன் புனித நீராட வேண்டும். அதிக நேரம் கடலில் புனித நீராட வேண்டாம் எனவும் கோவில் நிர்வாகம் சார்பில் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தப்பட்டது. திருச்செந்தூர் கோவில் கடற்கரையில் நேற்று ஜெல்லி மீன்கள் மீண்டும் கரை ஒதுங்கியதால் பரபரப்பு ஏற்பட்டது.

## கணவனை கழுத்தை இறுக்கி கொன்ற மனைவி



காவேரிப்பட்டணம், ஜூன் 30

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியம் பாளேகுளி கிராமத்தை சேர்ந்தவர் முருகேசன். இவருடைய மகன் ராம்குமார் (வயது 26). ஓசூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் ஊழியராக வேலை செய்து வந்தார். இவருக்கும் சூளகிரி பகுதியை சேர்ந்த சுஜாதா (23) என்பவருக்கும் கடந்த 11 மாதங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. இதையடுத்து கணவன், மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.

இந்த தகராறு குறித்து நாகரசம்பட்டி போலீஸ் நிலையத்துக்கு புகார் சென்று போலீசார் இருவரையும் சமாதானம் செய்து அனுப்பி வைத்ததாக தெரிகிறது. இதற்கிடையே நேற்று காலை ராம்குமார் தலையில் ரத்தக்காயங்களுடனும், ஒயரால் கழுத்து இறுக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டு கிடந்தார். இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்த பெற்றோர் மற்றும் உறவினர்கள் உடனடியாக நாகரசம்பட்டி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில் சம்பவ இடத்துக்கு சென்ற போலீசார் ராம்குமாரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கிருஷ்ணகிரி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்னர்.

இதற்கிடையே கணவன், மனைவி இடையே தகராறு ஏற்பட்டு வந்ததால் சந்தேகத்தின்பேரில் போலீசார், சுஜாதாவிடம் தீவிர விசாரணை நடத்தினர். அதில் பரபரப்பு தகவல்கள் வெளியாகி உள்ளது.

அதாவது திருமணமானது முதல் கணவன், மனைவி இடையே தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. இதனால் சுஜாதா தனது கணவன் மீது கோபத்தில் இருந்துள்ளார். போலீஸ் நிலையம் வரை தகராறு விவகாரம் சென்றதால் ஆத்திரமடைந்த அவர் கணவரை தீர்த்துக்கட்ட முடிவு செய்தார். இதற்காக சூளகிரியை பகுதியை சேர்ந்த தனது நண்பர்களான கணேசன் (19), மோகன் (18) ஆகியோரின் உதவியை நாடினார். அவர்களும் கொலை செய்ய சம்மதம் தெரிவித்தனர்.

இதையடுத்து நேற்று முன்தினம் இரவு வழக்கம்போல் ராம்குமார் சாப்பிட்டு விட்டு தூங்க சென்றார். அப்போது கணேசன், மோகன் ஆகியோர் சுஜாதா வீட்டிற்கு வந்தனர். பின்னர் அவர்கள் 3 பேரும் சேர்ந்து தூங்கி கொண்டிருந்த ராம்குமாரின் கழுத்தை ஒயரால் இறுக்கினர். மேலும் தலையில் பயங்கரமாக தாக்கினர். இதில் ராம்குமார் ரத்தக்காயம் அடைந்து சம்பவ இடத்திலேயே துடிதுடித்து இறந்தார். இதையடுத்து கணேசன், மோகன் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

பின்னர் நேற்று காலை கொலையை மறைப்பதற்காக சுஜாதா தனது கணவன் வாயில் ரத்தகாயத்துடன் இறந்து கிடப்பதாக அழுது நாடகமாடி உள்ளார். எனினும் அவரிடம் போலீசார் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தியதில் தனது நண்பர்களுடன் சேர்ந்து கொலை செய்ததை ஒப்புக்கொண்டார். இதையடுத்து போலீசார் கொலை வழக்குப்பதிவு செய்து சுஜாதா, கணேசன், மோகன் ஆகிய 3 பேரையும் கைது செய்தனர்.

## ஜூன் மாத ரேஷன் பொருட்களை ஜூலை மாதம் பெற்றுக்கொள்ளலாம்: தமிழக அரசு அறிவிப்பு



சென்னை, ஜூன் 30

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,

பொது விநியோகத் திட்ட குடும்ப அட்டைதாரர்கள் 2024ஜூன் மாதத்திற்கான பாமாயில் மற்றும் துவரம் பருப்பினை 2024 ஜூலை மாதம் பெற்றுக் கொள்ளலாம். தமிழ்நாடு அரசு சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் வாயிலாக 2.23 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம்தோறும் தலா ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.30க்கும் ஒரு லிட்டர் பாமாயில் ரூ.25க்கும் மானிய விலையில் வழங்கி வருகிறது. பாராளுமன்றத் தேர்தல் நடத்தை விதிகள் காரணமாக பாமாயில் மற்றும் துவரம் பருப்புக்கான ஒப்பந்தப்புள்ளிகள் மீதான முடிவுகள் மேற்கொண்டு அப்பண்டங்களைக் கொள்முதல் செய்வதில் காலதாமதம் நேரிட்டது. இருப்பினும் அரசின் தொடர்ந்த சீரிய முயற்சிகள் காரணமாக நகர்வுப் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு 2024 மே மாதத்திற்கான சிறப்பு அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கப்பெறாத குடும்ப அட்டைதாரர்கள் அவர்களுக்கான 2024மே மாத உரிம அளவு பாமாயில் மற்றும் துவரம் பருப்பினை 2024ஜீன் மாதத்தில் பெற சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு பெற்றுள்ளனர். கூடுதல் நகர்வு காரணமாக 2024 ஜுன்மாதத்தில் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் பெற இயலாத குடும்ப அட்டைதாரர்கள், துவரம் பருப்பு மற்றும் பாமாயில் பாக்கெட்டினை 2024ஜுலை மாதத்தில் பெற்றுக் கொள்ளலாம் என நடைபெற்று வரும் 20242025க்கான மானியக் கோரிக்கையின் போது உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் ஜுன் மாதத்தில் பருப்பு மற்றும் பாமாயில் பெற முடியாதவர்கள் ஜுலை மாதத்தில் நியாய விலைக் கடைகளில் துவரம்பருப்பு மற்றும் பாமாயில் பெற்றுக் கொள்ள தேவையான அனைத்து துரித ஏற்பாடுகளும் மேற்கொள்ளும்படி மாவட்ட வழங்கல் அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## குற்றாலம் தனியார் விடுதியில் 'ஸ்பா' என்ற பெயரில் விபசாரம்: 4 இளம்பெண்கள் மீட்பு



தென்காசி, ஜூன் 30

குற்றாலத்தில் தற்போது சீசன் நன்றாக உள்ளது. தமிழகம் மட்டுமல்லாமல் பிற மாநிலங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் ஏராளமானோர் சீசனை அனுபவிக்க குற்றாலத்திற்கு தினமும் வருகிறார்கள்.

இதையொட்டி குற்றாலத்தில் பல்வேறு தனியார் தங்கும் விடுதிகளில் மசாஜ் சென்டர்கள் இயங்குகின்றன. இதனை 'ஸ்பா' என்று அந்த விடுதிகளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அங்கு பெரும்பாலும் ஆண்களுக்கு பெண்களே மசாஜ் செய்து வருகிறார்கள்.

இந்நிலையில் ஐந்தருவி சாலையில் அமைந்துள்ள ஒரு தனியார் தங்கும் விடுதியில் 'ஸ்பா' என்ற பெயரில் பெண்களை வைத்து விபசாரம் நடைபெறுவதாக குற்றாலம் போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

அதன்பேரில், குற்றாலம் போலீசார் நேற்று அந்த தனியார் தங்கும் விடுதிக்கு விரைந்து சென்று அதிரடி சோதனை நடத்தினர். அப்போது அங்கு 'ஸ்பா' என்ற பெயரில் பெண்களை வைத்து விபசாரம் நடத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதுதொடர்பாக அங்கிருந்த 3 பேரை பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர்கள், கேரள மாநிலம் கோழிக்கோடு பகுதியைச் சேர்ந்த நாராயணனின் மகன் நந்தகுமார் (வயது 24), கோட்டயத்தை சேர்ந்த ராஜப்பனின் மகன் அகில் (28) மற்றும் ஆலப்புழாவை சேர்ந்த முரளியின் மகன் ஆனந்த் (28) ஆகியோர் என்பது தெரியவந்தது. அவர்கள் 3 பேரையும் போலீசார் கைது செய்தார்கள்.

மேலும், அங்கிருந்த 4 இளம்பெண்களை மீட்டு காப்பகத்துக்கு அனுப்பி வைத்தனர்.

## ஊட்டி, கொடைக்கானல் செல்ல இபாஸ் நீட்டிப்பு



சென்னை, ஜூன் 30

ஊட்டி மற்றும் கொடைக்கானல் சுற்றுலா தலங்களுக்கு செல்ல இபாஸ் முறை மே மாதம் முதல் நடைமுறையில் உள்ளது. ஒரே நாளில் அதிகப்படியான சுற்றுலா பயணிகள் குவிவதால் ஏற்படும் பிரச்சினைகளை தடுக்கவே இந்த நடைமுறை கொண்டு வரப்பட்டது.

மே மாதம் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த நடைமுறை வரும் 30ம் தேதி வரை பின்பற்றப்படும் என உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், தற்போது செப்.30 வரை நீட்டிக்கப்ப ட்டுள்ளது. இது தொடர்பான விசாரணை இன்று சென்னை ஐகோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. அப்போது, நீலகிரி மற்றும் கொடைக்கானலுக்கு எத்தனை வாகனங்கள் செல்லலாம் என்பது குறித்து சென்னை ஐஐடி, பெங்களூரு ஐஐஎம் மையங்கள் தரப்பில் ஆய்வு செய்து வருகின்றனர், இபாஸ் நடைமுறையை நீட்டிக்கலாம் என்றும் சென்னை கோர்ட்டில் தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, செப்.30 வரை இபாஸ் நீட்டித்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

## தொடர் மழை எதிரொலி: 100 அடியை எட்டிய பாபநாசம் அணை நீர்மட்டம்



நெல்லை, ஜூன் 30

கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்கி பலத்த மழையாக பெய்து வருகிறது. இதையொட்டி கேரளாவை ஒட்டி அமைந்துள்ள தமிழக எல்லையோர பகுதியில் அதாவது மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் மழை தொடர்ந்து பெய்து வருகிறது. 25ந்தேதி மற்றும் 26ந்தேதிககளில் நீர்பிடிப்பு பகுதியில் பலத்த மழை கொட்டியது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதித்தது. நேற்று வெயில் தாக்கம் அதிகமாக இருந்தது. நெல்லையில் மதியம் வெயில் சுட்டெரித்தது. இருந்த போதிலும் அணைகளுக்கு நீர்வரத்து சீராக உள்ளது.

இதனால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. 143 அடி உயரம் கொண்ட பாபநாசம் அணை நீர்மட்டம் நேற்று காலை 8 மணி நிலவரப்படி 99.90 அடியாக இருந்தது. படிப்படியாக நீர்மட்டம் உயர்ந்து 100 அடியை எட்டியது.


அணைக்கு வினாடிக்கு 2,577 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து பாசனத்துக்கு 805 கன அடி தண்ணீர் தாமிரபரணி ஆற்றில் திறந்து விடப்பட்டு உள்ளது. இதனுடன் இணைந்த 156 அடி உயரம் கொண்ட சேர்வலாறு அணை நீர்மட்டம் 115 அடி ஆனது.

இதேபோல் 118 அடி உயரம் கொண்ட மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 78.64 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 567 கன அடியாகவும், வெளியேற்றம் 400 கன அடியாகவும் உள்ளது. 52 அடி உயரம் கொண்ட கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 51 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 48 கன அடியாகவும், வெளியேற்றம் 20 கன அடியாகவும் உள்ளது.

தென்காசி மாவட்டத்தில் உள்ள கடனாநதி, ராமநதி அணைகளுக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகமாக இருப்பதால் அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. 85 அடி கொண்ட கடனாநதி அணை நீர்மட்டம் 59 அடியாகவும், 84 அடி உயரம் கொண்ட ராமநதி அணை நீர்மட்டம் 75 அடியாகவும் உள்ளது.

செங்கோட்டை அருகே உள்ள குண்டாறு அணை நிரம்பி விட்டதால், அணைக்கு வருகிற 81 கன அடி தண்ணீர் அப்படியே உபரிநீராக மறுகால் பாய்கிறது. 132 அடி உயரம் கொண்ட அடவிநயினார் அணை நீர்மட்டம் 90 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 114 கன அடியாகவும், வெளியேற்றம் 5 கன அடியாகவும் உள்ளது. கருப்பாநதி அணை நீர்மட்டம் 37.40 அடியாக உள்ளது. நீர்வரத்து வினாடிக்கு 23 கன அடியாகவும், வெளியேற்றம் 2 கன அடியாகவும் உள்ளது. நெல்லை, தென்காசி மாவட்டங்களில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு: பாபநாசம்9, சேர்வலாறு1, மணிமுத்தாறு1, மாஞ்சோலை9, காக்காச்சி24, நாலுமுக்கு32, ஊத்து33, கடனா நதி அணை2, ராமநதி6, கருப்பாநதி4, குண்டாறு2, அடவிநயினார்15, செங்கோட்டை2, தென்காசி4.

## சாலையில் சுற்றித் திரியும் மாடுகள்; 3வது முறை பிடிபட்டால் ஏலம் விடப்படும் : சென்னை மாநகராட்சி எச்சரிக்கை




சென்னை, ஜூன் 30

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக சாலையில் சுற்றித் திரியும் மாடுகள் முதல்முறை பிடிபட்டால் 5 ஆயிரம் ரூபாய் அபராதமும், இரண்டாவது முறை பிடிபட்டால் 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் மாட்டின் உரிமையாளர்களுக்கு விதிக்கப்படுகிறது.

இதன்படி கடந்த 2023ம் ஆண்டு 4 ஆயிரத்து 237 மாடுகள் பிடிக்கப்பட்டு, சுமார் 92 லட்ச ரூபாய் அபராதம் விதிக்கப்பட்ட நிலையில், இந்த ஆண்டு இதுவரை 1,212 மாடுகள் பிடிக்கப்பட்டு 43லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் அபாரதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சாலையில் பிடிக்கப்படும் மாடுகளுக்கு அடையாள சிப் பொருத்தப்படுவதோடு, ஒரே மாடு மூன்றாவது முறை பிடிக்கப்பட்டால் அந்த மாடு ஏலம் விடப்படும் என்றும், மாடுகளை பிடிக்கும்போது அதன் உரிமையாளர்கள் இடையூறு செய்தால், அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்படும் என்றும் சென்னை மாநகராட்சி எச்சரிக்கைவிடுத்துள்ளது.

## பள்ளி மாணவிக்கு காதல் தொல்லை கொடுத்த வாலிபர் கைது

வேலூர், ஜூன் 30

வேலூர் விருப்பாட்சிபுரம் பகுதியை சேர்ந்தவர் 15 வயது மாணவி, அதே பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வருகிறார். சம்பவத்தன்று மாணவி வழக்கம் போல பள்ளிக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது அதே பகுதியைச் சேர்ந்த தினேஷ் (வயது 19) என்பவர் மாணவியை வழிமறித்து, தன்னை காதலிக்குமாறு வற்புறுத்தியதாக கூறப்படுகிறது. இதனால் அதிர்ச்சியடைந்த மாணவி நடந்ததை பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து மாணவியின் பெற்றோர் போலீசில் புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து தினேசை கைது செய்தனர்.

# ரீல்ஸ் மோகம்: கொள்ளிடம் பாலத்தில் தண்டால் எடுத்த வாலிபர்



திருச்சி, ஜூன் 30

இன்றையஇளைஞர்கள் மட்டுமின்றி பெண்கள் மத்தியிலும் "ரீல்ஸ்" மோகம் அதிகரித்து வருகிறது. இந்தநிலையில் திருச்சிநம்பர்1டோல்கேட் செல்லும் கொள்ளிடம் பாலத்தின் சிமெண்டு தடுப்புச்சுவரில் இளைஞர் ஒருவர் விறுவிறுவென ஏறி 'தண்டால்' எடுக்க தொடங்கினார்.

அப்போது கொள்ளிடம் பாலத்தில் ஏராளமான வாகனங்கள் சென்று கொண்டிருந்தன. அவர் தவறி கீழே விழுந்தால் ரோட்டில்தான் விழ வேண்டும் அல்லது அந்த பக்கம் உள்ள ஆற்றில் விழ வேண்டும். இதனால் அதனைப் பார்த்து பதறிப்போன சிலர் தங்களது வாகனங்களை நிறுத்திவிட்டு அந்த இளைஞரை கீழே இறங்கி வருமாறு கேட்டுக்கொண்டனர்.

சற்று நேரத்துக்கு பிறகு அவர் கீழே இறங்கி வந்தார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இதுபோன்ற சம்பவங்களை தடுக்க போலீசார் கடும்நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# சென்னை விமான நிலையத்தில் ரூ.21 கோடி மதிப்பிலான போதைப்பொருள் பறிமுதல்




சென்னை, ஜூன் 30

ஆப்பிரிக்க நாடான கானாவில் இருந்து சென்னை விமான நிலையத்திற்கு வந்திறங்கிய பெண் பயணி ஒருவரிடம் விமான நிலைய அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். இந்த சோதனையின்போது அந்த பெண்ணின் கைப்பை மற்றும் காலணியில் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

அந்த பெண்ணிடம் இருந்து ரூ.21 கோடி மதிப்புள்ள 2 கிலோ கொக்கைன் போதைப்பொருளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதையடுத்து அந்த பெண் கைது செய்யப்பட்டு சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

# நீலகிரி சிறப்பு மலை ரெயில் சேவை ஆகஸ்டு 5ந் தேதி வரை நீட்டிப்பு

ஊட்டி, ஜூன் 30

மலைகளின் அரசியான நீலகிரி மாவட்டம் ஊட்டியில் சுற்றுலா தலங்களை கண்டு ரசிக்க வெளிமாநில மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் ஏராளமானோர் வந்து செல்கின்றனர். கோடை சீசன், 2வது சீசன் காலங்களில் லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் ஊட்டிக்கு வருகை தரும்போது, ஊட்டி மலை ரெயிலில் பயணம் செய்ய ஆர்வம் காட்டுகின்றனர்.

ரெயிலில் கூட்டம் அலைமோதுவதால், சிலருக்கு டிக்கெட் கிடைக்காமல் போவதால் ஏமாற்றம் அடைகின்றனர். எனவே சுற்றுலா பயணிகளுக்காக சிறப்பு மலை ரெயில் இயக்கப்படுகிறது. இதன்படி இந்த ஆண்டு கோடை சீசனை முன்னிட்டு ஊட்டி

குன்னூர், ஊட்டி மேட்டுப்பாளையம் மற்றும் ஊட்டி கேத்தி இடையே கடந்த மார்ச் மாதம் 29ந் தேதி முதல் சிறப்பு மலை ரெயில் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த சிறப்பு ரெயில் ஜூலை 1ந்தேதி வரை இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் சுற்றுலா பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றதால், சிறப்பு ரெயில் சேவை நீட்டிக்க கோரிக்கை விடுத்தனர். இதனால் தற்போது மீண்டும் மலைரெயில் சேவை வருகிற ஆகஸ்டு 5ந்தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதன்படி குன்னூர் ஊட்டி இடையே சிறப்பு மலைரெயில் சேவை ஜூலை 5ந்தேதி தொடங்கி ஆகஸ்டு 5ந் தேதி வரை அனைத்து சனி, ஞாயிற்று கிழமைகளில் குன்னூரில் காலை 8.20க்குபுறப்பட்டு 9.40க்கு ஊட்டி வந்தடையும். ஊட்டியில் இருந்து மாலை 4.45க்குபுறப்பட்டு 5.55க்கு குன்னூர் சென்றடையும்.

மேட்டுப்பாளையம் ஊட்டி இடையே ஆகஸ்டு 5ந் தேதி வரை அனைத்து வெள்ளி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் மட்டும் மேட்டுப்பாளையத்தில் காலை 9.10க்குபுறப்பட்டு மதியம் 2.25க்கு ஊட்டிக்கு வந்தடையும். ஊட்டி மேட்டுபாளையம் இடையே அனைத்து சனி, திங்கள்கிழமைகளில் மட்டும் காலை 11.25க்கு புறப்பட்டு மாலை 4.20க்கு மேட்டுபாளையம் சென்றடையும். நீட்டிக்கப்பட்ட சிறப்பு ரெயிலில் முன்பதிவு செய்து பயணிக்கலாம் என சேலம் ரெயில்வே கோட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# சென்னையில் தலைமறைவாக இருந்த பயங்கரவாதி கைது



சென்னை, ஜூன் 30

உபா சட்டத்தில் தேடப்பட்டு வந்த அனோவர் என்ற பயங்கரவாதி கோயம்பேட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். மேற்கு வங்காளத்தை சேர்ந்த அனோவர் அன்சார் அல் இஸ்லாம் என்ற பயங்கரவாத அமைப்பில் தொடர்புடையவர் என தகவல் வெளியாகியுள்ளது. சென்னையில் கட்டுமான பணியில் ஈடுபட்டு வந்த அனோவரை மேற்கு வங்காள காவல்துறையினர் கைது செய்தனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்ட ஹபிபுல்லா என்ற பயங்கரவாதி கொடுத்த தகவலின் பேரில் அனோவர் கைது செய்யப்பட்டுள்ளார். அரசுக்கு எதிராக சட்டவிரோத செயலில் ஈடுபடுதல் உள்ளிட்ட பிரிவுகளில் அனோவர் மீது வழக்குகள் உள்ளன. கைது செய்யப்பட்ட அனோவரை கொல்கத்தாவிற்கு அழைத்து செல்வதற்கான நடைமுறைகளில் மேற்கு வங்காள போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

# நீட் தேர்வை கண்டித்து 3ம் தேதி திமுக மாணவரணி சார்பில் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூன் 30

நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி தி.மு.க. தலைவரும் முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். நீட் விலக்கு மசோதாவுக்கு உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என வலியுறுத்தி இன்று. முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனித் தீர்மானம் கொண்டு வந்தார். இந்நிலையில், நீட் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிற 3ம் தேதி தி.மு.க. மாணவரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 24ம் தேதி நடைபெற இருந்த ஆர்ப்பாட்டம் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் தற்போது 3ம் தேதி நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தி.மு.க. மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

# திருமணம் செய்துகொள்வதாக கூறி சிறுமி பாலியல் பலாத்காரம்: தொழிலாளி கைது

திருப்பத்தூர், ஜூன் 30

திருப்பத்தூர் அருகே மேற்கத்தியனூர்பகுதியை சேர்ந்தவர் கிருஷ்ணமூர்த்தி (வயது 35). கூலி தொழிலாளி. இவர் கடந்த ஒரு மாதத்துக்கு முன் திருப்பத்தூர் பகுதியை சேர்ந்த 17 வயது சிறுமியை திருமணம் செய்து கொள்வதாக ஆசைவார்த்தை கூறி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இதுகுறித்து சிறுமி கொடுத்த புகாரின் பேரில், திருப்பத்தூர் தாலுகா போலீசார் போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து கிருஷ்ணமூர்த்தியை கைது செய்தனர்.

# மாமல்லபுரம் அருகே ரவுடியை சுட்டுப்பிடித்த போலீசார்



செங்கல்பட்டு, ஜூன் 30

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் அருகே பல்வேறு கொலை வழக்குகளில் தொடர்புடைய ரவுடியை போலீசார் சுட்டுப்பிடித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பகுதியைச் சேர்ந்தவர் சீர்காழி சத்யா. இவர் மீது கொலை, கொலை முயற்சி, வழிப்பறி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன.

பிரபல ரவுடியான சீர்காழி சத்யா கடந்த 2021ல் பா.ஜ.க.வில் இணைந்துள்ளார்.

இவர் திருச்சி ராமஜெயம் கொலை வழக்கில் உண்மை கண்டறியும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் மாமல்லபுரம் பகுதியில் ஒரு விழாவில் கலந்து கொள்ள வந்த சீர்காழி சத்யாவை போலீசார் மடக்கி பிடித்தனர். அப்போது போலீசாரை தாக்கி விட்டு ரவுடி சத்யா மற்றும் அவரது கூட்டாளிகள் தப்ப முன்றனர். இதையடுத்து தற்காப்புக்காக போலீசார் சத்யாவை துப்பாக்கியால் சுட்டு பிடித்தனர்.

சத்யாவிடம் இருந்து ஒரு கை துப்பாக்கி மற்றும் ஆயுதங்களை போலீசார் பறிமுதல் செய்தனர். போலீசார் சுட்டதில் காலில் பலத்த காயம் அடைந்த சத்யா செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# உதவி செய்வதுபோல் நெருக்கம்: 17 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த ஆசிரியர் கைது

தர்மபுரி, ஜூன் 30

தர்மபுரி மாவட்டம் பொம்மிடி பகுதியை சேர்ந்தவர் சரவணன் (வயது 48). இவர் தர்மபுரி அருகே உள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் கடந்த சில ஆண்டுகளாக ஆசிரியராக பணியாற்றி வந்தார். இவருக்கு திருமணமாகி மனைவி, குழந்தைகள் உள்ளனர். இவர் பணிபுரிந்த பள்ளியில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தந்தையை இழந்த ஒரு சிறுமி 8ம் வகுப்பு படித்து வந்தார்.

தாயின் பராமரிப்பில் இருந்து வந்த சிறுமியின் குடும்ப சூழ்நிலையை பார்த்து ஆசிரியர் சரவணன் அந்த சிறுமிக்கு சில உதவிகளை செய்து வந்தார். அதன் பின்னர் சிறுமி தர்மபுரியில் உள்ள வேறு ஒரு அரசு பள்ளியில் பிளஸ்2 படிப்பை முடித்தார். தற்போது 17 வயதான சிறுமி தர்மபுரி அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்தில் ஒரு புகார் அளித்துள்ளார். அதில் ஆசிரியர் சரவணன் தன்னை பாலியல் பலாத்காரம் செய்து விட்டதாக கூறியிருந்தார். இதுதொடர்பாக தர்மபுரி அனைத்து மகளிர் போலீசார் விசாரணை நடத்தினர். அதில் சிறுமிக்கு உதவிகள் செய்து நெருக்கமாக பழகிய சரவணன் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்தது தெரியவந்தது.

இதுகுறித்து அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டப்பிரிவின் கீழ் வழக்குப்பதிந்து ஆசிரியர் சரவணனை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் தர்மபுரி பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பெண் போலீசிடம் தகராறில் ஈடுபட்ட வாலிபர்



ஈரோடு, ஜூன் 30

ஈரோடு மாவட்டம் மேட்டூர்ரோடு முனிசிபல் காலனி பிரிவில் சம்பவத்தன்று ஸ்கூட்டரில் 3 வாலிபர்கள் வந்தனர். அப்போது, அங்கு போக்குவரத்தை ஒழுங்குப்படுத்தும் பணியில் இருந்த வடக்கு போக்குவரத்து போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் ரேணுகா, அவர்களை மடக்கி பிடித்தார்.

அப்போது அந்த வாலிபர்கள் மதுபோதையில் இருந்தது தெரியவந்தது. இதையடுத்து ஸ்கூட்டரை ஓட்டி வந்த வாலிபரிடம் லைசன்ஸ், ஆர்.சி. புக் உள்ளிட்ட ஆவணங்களை கேட்டுள்ளார். இதற்கு மதுபோதையில் இருந்த வாலிபர்கள், ரேணுகாவிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும் ரேணுகாவை யோகேஷ் என்ற வாலிபர் தகாத வார்த்தையால் திட்டி தகராறில் ஈடுபட்டார். தொடர்ந்து யோகேஷ் சட்டையை கழற்றி ரோட்டில் படுத்து உருண்டார்.

வாலிபரின் செய்கையை செல்போனில் படம் பிடிக்கவும், தகவல் கூறி கூடுதல் போலீசாரை வரவழைக்கவும் பாக்கெட்டில் இருந்த தனது செல்போனை ரேணுகா எடுத்துள்ளார். அப்போது, யோகேஷ் அதை தட்டி விட்டதாக தெரிகிறது.

இதைத்தொடர்ந்து மது போதையில் ஸ்கூட்டரை ஓட்டி வந்ததாக யோகேஷ் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. மேலும் இது குறித்து சப்இன்ஸ்பெக்டர் ரேணுகா ஈரோடு அரசு ஆஸ்பத்திரி போலீசில் புகார் அளித்தார்.

அதன்பேரில் யோகேஷ் மீது பொது இடத்தில் அநாகரீகமாக நடந்து கொள்ளுதல், அரசு ஊழியரை பணி செய்ய விடாமல் தடுத்தல் உள்பட 3 பிரிவுகளின்கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர். பின்னர் அவர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம் செய்யப்படும் சட்டசபையில் 110 விதியின் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை



சென்னை, ஜூன் 30

சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்வது குறித்து 110 விதியின் கீழ் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டப் பேரவையில் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்.

இது தொடர்பாக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் பேசியதாவது,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை மக்கள் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழச் சிறந்த பல திட்டங்களை உருவாக்கி வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் இதுவரை 29 ஆயிரத்து 439 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், 1 இலட்சத்து 70 ஆயிரத்து 462 தனி வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 172 திட்டப் பகுதிகளில் 79 ஆயிரத்து94 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், 89 ஆயிரத்து 429 தனி வீடுகளுக்கான கட்டுமானப் பணிகளும் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டப் பணிகளுக்காக 6 ஆயிரத்து 685 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டும் பணியில் மட்டும் கவனம் செலுத்தி, அத்துடன் நின்றுவிடாமல், இந்த அரசு பழைய அடுக்குமாடிக் குடியிருப்புகளின் மறுசீரமைப்பிலும் கவனம் செலுத்துகிறது. சென்னை மற்றும் இதர நகரங்களில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளில் சில நீண்டகாலப் பயன்பாடு மற்றும் தட்பவெப்ப நிலை காரணமாக சிதிலமடைந்துள்ளன. இந்தக் குடியிருப்புகளை முறையாகக் கணக்கெடுத்து, அவற்றை மறுகட்டுமானம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மறுகட்டுமானத்திற்குப் பின் இக்குடியிருப்புகள், புதுமையான, மேம்படுத்தப்பட்ட அம்சங்கள் மற்றும் வசதிகளுடன் பழைய குடியிருப்புகளில் முன்னர் வாழ்ந்த குடும்பங்களுக்கும், இதே திட்டப் பகுதிகளின் அருகில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் தற்போது, தமிழ்நாடு முழுவதும் 1 இலட்சத்து 93 ஆயிரத்து 891 அடுக்குமாடிக் குடியிருப்புகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள், 28 ஆயிரத்து 643 குடியிருப்புகள் சிதிலமடைந்துள்ளதாக தொழில்நுட்ப வல்லுநர் குழுவால் கண்டறியப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் மறுகட்டுமானம் செய்யப்படும். இதன் முதற்கட்டமாக, 2024 2025 ஆம் ஆண்டில், சென்னை மாநகரில் கிழக்கு கல்லறை சாலை, கொடுங்கையூர், வ.உ.சி. நகர் போன்ற திட்டப்பகுதிகள், தஞ்சாவூரில் ஏ.வி.பதி நகர் திட்டப்பகுதி மற்றும் திருச்சியில் கோட்டக் கொல்லை திட்டப்பகுதி ஆகியவற்றில் உள்ள 6 ஆயிரத்து 746 அடுக்குமாடிக் குடியிருப்புகள், ஆயிரத்து 146 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மறுகட்டுமானமும் மற்றும் புதிய திட்டப்பகுதிகளில் கட்டுமானமும் மேற்கொள்ளப்படும். என தெரிவித்தார்.

# போதிய பள்ளி கட்டிடம் இல்லாததால் மரத்தடியில் பாடம் படிக்கும் மாணவர்கள்



தஞ்சாவூர், ஜுன் 30


தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் வட்டம் வெட்டுவாக்கோட்டை கிராமத்தில் முத்துமாரியம்மன் கோவில்அருகில்ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர்.

இந்த பள்ளிக்கு போதுமான பள்ளி கட்டிட வசதி இல்லாததால், இந்த பள்ளியில் பயிலும் 4,5,7 ஆகிய வகுப்புகளை சேர்ந்த சுமார் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் பள்ளி வளாகத்தின் வெளியே உள்ள மரத்தடியில் அமர்ந்து கல்வி பயின்று வருகின்றனர்.

மழை மற்றும் வெயில் காலங்களில் மரத்தடியில் அமர்ந்து பாடம் படிக்கும் மாணவர்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருவதாக பெற்றோர் வேதனைப்படுகின்றனர். இந்த பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. இதனால் மாணவர்களின் கல்வித்தரம் பாதிக்கப்படுவதாக பெற்றோர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

எனவே வெட்டுவாக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு கூடுதல் பள்ளி கட்டிடமும், இந்த பள்ளியில் உள்ள காலி பணியிடங்களுக்கு போதுமான ஆசிரியர்களை நியமித்து சம்பந்தப்பட்ட கல்வித்துறை அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த பகுதியை சேர்ந்த பெற்றோர் மற்றும் பொது மக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 'ஒன் 2 ஒன்' படத்தின் டிரைலரை வெளியிடும் ஆர்யா




இயக்குனர் கே.திருஞானம் இயக்கத்தில் சுந்தர்.சி நாயகனாகவும், அனுராக் காஷ்யப் வில்லனாகவும் நடித்துள்ளதிரைப்படம் 'ஒன் 2 ஒன்'. இந்த படத்தில் விஜய் வர்மன், நீது சந்திரா, ராகினி திவிவேதி, மானஸ்வி, ரியாஸ் கான் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.இந்த படத்துக்கு சித்தார்த் விபின் இசையமைத்துள்ளார். எஸ். கே.ஏ. பூபதி கார்த்திக், பிரவீன் நித்தியானந்தம், விக்ரம் மோகன் ஆகியோர் ஒளிப்பதிவு செய்துள்ளனர். சி.எஸ். பிரேம் குமார் படத்தொகுப்பு செய்கிறார். படத்தின் படப்பிடிப்பு முடிந்த நிலையில் இறுதிக்கட்டப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்த படத்தின் டிரைலர் நாளை மாலை 5 மணிக்கு வெளியாக உள்ளது வெளியாக உள்ளது. இந்த நிலையில் நடிகர் ஆர்யா ஒன் 2 ஒன்' படத்தின் டிரைலரைவெளியிடுவார்எனபடக்குழுஅறிவித்துள்ளது.

## திருப்பதியில் முடிகாணிக்கை செலுத்தி வழிபாடு செய்த பின்னணி பாடகி பி.சுசீலா



இனிய குரலால் பெரும் புகழ்பெற்ற பி.சுசீலா தமிழ் உள்ளிட்ட அனைத்து இந்திய மொழிகளிலும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை பாடி உள்ளார். 1953ல் 'பெற்றதாய்' படத்தில் பாடகியாக அறிமுகமாகி, மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன, தமிழுக்கு அமுதென்று பேர், சிட்டுக்குருவி முத்தம் கொடுத்து, உன்னை காணாத கண்ணும் கண்ணல்ல, அமுதே பொழியும் நிலவே, உன்னை நான் சந்தித்தேன், ஆயிரம் நிலவே வா, பார்த்த ஞாபகம் இல்லையோ, நான் பேச நினைப்பதெல்லாம் உள்பட ஆயிரக்கணக்கான காலத்தால் அழிக்க முடியாத பாடல்களை பாடியுள்ளார்.

மத்திய அரசு அவருக்கு பத்மபூஷண் விருதை வழங்கியது. 5 முறை தேசிய விருதுகளையும், 11 மாநில விருதுகளையும் பெற்றுள்ளார். தென்னிந்திய மொழிகளில் அதிக பாடல்கள் பாடி கின்னஸ் சாதனை படைத்துள்ளார். தற்போது 88 வயதாகும் இவர் திருப்பதி வெங்கடாஜலபதி கோவிலில் முடி காணிக்கை கொடுத்து தரிசனம் செய்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

. 2 பேரின் துணையுடன் நடக்க முடியாமல் வந்த பி.சுசீலா, முடி காணிக்கை செலுத்திவிட்டு, சாமி தரிசனம் செய்தார்.மேலும் நாராயண மந்திரம் பாடலை மூச்சிறைக்க பாடி அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய சுசீலாவின் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

## "நேசிப்பாயா" படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியானது




2003ம் ஆண்டில் தெலுங்கு திரைப்படமான 'குறும்பு' என்ற திரைப்படத்தை இயக்கி இயக்குனராக அறிமுகமாகினார் விஷ்ணுவர்தன். அதைத் தொடர்ந்து தமிழில் அறிந்தும் அறியாமலும், பட்டியல் போன்ற வெற்றி படங்களை இயக்கினார்.

அஜித் நடிப்பில் 2007ம் ஆண்டு வெளியான 'பில்லா' திரைப்படத்தை இயக்கினார். இப்படத்தில் அஜித்துடன் நயன்தாரா, நமீதா, ரகுமான், பிரபு, ஆதித்யா மேனன் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்து இருந்தனர். இப்படம் மாபெரும் வெற்றி பெற்றது. இயக்குனர் விஷ்ணுவர்தனுக்கு மிகப்பெரிய திருப்புமுனையாக இப்படம் அமைந்தது.

2021ம் ஆண்டு ஷெர்ஷா எனும் இந்தி திரைப்படத்தை கரன் ஜோஹர் தயாரிப்பில் இயக்கினார். இந்நிலையில் நீண்ட இடைவேளைக்கு பிறகு மீண்டும் விஷ்ணுவர்தன் தமிழில் படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தில் ஆகாஷ் முரளி மற்றும் அதிதி சங்கர் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடிக்கவுள்ளனர். இந்தப் படத்தை 'மாஸ்டர்' படத்தை தயாரித்த சேவியர் பிரிட்டோ தயாரிக்கிறார். இப்படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கவுள்ளார்.

இந்தப்படத்திற்கு 'நேசிப்பாயா' என பெயரிடப்பட்டுள்ளது. இந்நிலையில் "நேசிப்பாயா" படத்திற்கான பர்ஸ்ட் லுக் போஸ்டர் இன்று வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்தது. இதையடுத்து தற்போது அந்தப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி உள்ளது.

## காஜல் அகர்வாலின் 'சத்யபாமா' ஓ.டி.டி.யில் வெளியானது!



நடிகை காஜல் அகர்வாலின் 60வது படமான 'சத்யபாமா' அமேசான் பிரைம் ஓ.டி.டி.யில் வெளியாகியுள்ளது.

2007ம் ஆண்டு வெளிவந்த தெலுங்கு படமான லக்ஷ்மி கல்யாணம் படத்தின் மூலம் தெலுங்கு சினிமாவில் கதாநாயகியாக காஜல் அகர்வால் அறிமுகமாகினார். அதைத்தொடர்ந்து 'சந்தாமாமா' படத்தின் மூலம் மக்களிடம் மிகப் பெரிய வரவேற்பை பெற்று பிரபலமானார். 2009ம் ஆண்டு ராஜமவுலி இயக்கத்தில் வெளிவந்த 'மகதீரா' படம் காஜல் அகர்வாலுக்கு மிகப் பெரிய திருப்புமுனையாகஅமைந்தது.அதைத்தொடர்ந்துதெலுங்குசினிமாவில்டார்லிங்,பிருந்தாவனம், மிஸ்டர்பெர்பக்ட்,நாயக்,பிசினஸ்மேன்போன்றபிரபலபடங்களில்முன்னணிநட்சத்திரங்களுடன் ஜோடியாக நடித்தார்.

பின் 2008ம் ஆண்டு பேரரசு இயக்கத்தில் பரத் நடிப்பில் வெளிவந்த பழனி படத்தில் நடித்து தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமானார். அதை தொடர்ந்து தமிழ் மற்றும் தெலுங்கு மொழிப் படங்களில் நடித்தார். நான் மகான் அல்ல, துப்பாக்கி, ஜில்லா, மாற்றான், மாரி போன்ற பல ஹிட்டான தமிழ் படங்களில் நடித்துள்ளார்.

கடைசியாக 2023ம் ஆண்டு வெளியான கருங்காப்பியம் படத்தில் நடித்தார். அதற்கு அடுத்து தெலுங்கு படமான சத்யபாமா படத்தில் நடித்துள்ளார். அறிமுக இயக்குனரான சுமன் சிக்கலா இப்படத்தை இயக்கியுள்ளார். காஜல் அகர்வாலுடன் பிரகாஷ் ராஜ் மற்றும் நவீன் சந்திரா ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். போலீஸ் அதிகாரியாக காஜல் அகர்வால் இப்படத்தில் நடித்துள்ளார்.

கடந்த ஜூன் 7ஆம் தேதி வெளியான இந்தப் படம் கலவையான விமர்சனங்களைப் பெற்றன. தற்போது அமேசான் பிரைம் ஓ.டி.டி.யில் வெளியாகியுள்ளது.

## உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட நடிகர் வெங்கல் ராவுக்கு, நடிகர் வடிவேலு நிதியுதவி




தமிழ் திரையுலகில் பிரபல காமெடி நடிகராக வலம் வந்தவர் வெங்கல் ராவ். கந்தசாமி, தலைநகரம், சீனா தானா 007, எலி உள்ளிட்ட பல படங்களில் வெங்கல் ராவின் காமெடிக்கு பெரிய வரவேற்பு கிடைத்தது. சமீபகாலமாக அவருக்கு பட வாய்ப்புகள் இல்லை. தற்போது வெங்கல் ராவுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டு கை கால்கள் செயல் இழந்துள்ளது.

ஒரு கை, ஒரு கால் செயலிழந்து வீட்டில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் சிகிச்சைக்கு பணம் தேவைப்படுவதாகவும் கூறி சினிமா தொழிலாளர்கள் தனக்கு உதவ வேண்டுமென்றுவீடியோவெளியிட்டுஇருந்தார்வெங்கல்ராவ்.அதனைத்தொடர்ந்து நடிகர்வெங்கல்ராவின்சிகிச்சைக்குநடிகர்சிம்புரூ.2லட்சம்நிதியுதவிஅளித்திருந்தார். நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் ரூ.25 ஆயிரம் நிதி வழங்கி உள்ளார். இதையடுத்து வெங்கல் ராவிடம், நடிகர் சங்கம் சார்பில் அதன் துணைத் தலைவர் பூச்சி முருகன் தொடர்பு கொண்டு பேசி மருத்துவ உதவிகளுக்கு நடிகர் சங்கம் ஏற்பாடு செய்யும் என்று உறுதி அளித்ததாக அறிவிக்கப்பட்டு உள்ளது. அத்துடன் நடிகர் சங்கம் சார்பில் வெங்கல்ராவுக்கு ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டது. "கலக்கப்போது யாரு" நடிகர் பாலாவும் வெங்கல்ராவுக்கு ரூ.1 லட்சம் நிதி வழங்கி உள்ளார்.

இந்நிலையில் நடிகர் வடிவேலு ஒரு லட்சம் ரூபாயை வெங்கல் ராவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். வடிவேலு தன்னுடன் நடித்த நடிகர்கள் எவ்வளவு மோசமான நிலையில் இருந்தாலும் அவர்களுக்கு உதவி செய்ய மாட்டார் என நடிகர்களே சிலர் அவர் மீது இதற்கு முன்பு குற்றச்சாட்டை வைத்திருந்தனர். அதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் வடிவேலு தற்போது வெங்கல் ராவுக்கு உதவி செய்திருக்கிறார். வெங்கல் ராவுடன் போனில் பேசிய வடிவேலு, அவருக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் பேசினாராம்.

## க்ஷ்சாக்ஷி அகர்வால் வெளியிட்ட வொர்க் அவுட் வைரல்



எப்போதும்சமூகவலைத்தளங்களில்ஆக்டிவாகஇருக்கும்சாக்ஷிஅகர்வால்தற்போது வொர்க் அவுட் செய்த வீடியோவை இணையத்தில் வெளியிட அது தீயாய் பரவி வருகிறது.

மாடல் அழகியாக பல்வேறு விளம்பர திரைப்படங்களில் நடித்ததன் மூலமாக பிக் பாஸ் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கான வாய்ப்பு கிடைத்து அதன் மூலம் மிகப்பெரிய அளவில் பிரபலமானவர் தான் சாக்ஷி அகர்வால். மாடல் அழகியாக பல்வேறு விளம்பர திரைப்படங்களிலும்போட்டோசூட்நடத்தியும்பிரபலமானகவர்ச்சி மாடல்அழகியாக தென்பட்டு வந்தார் . முதன் முதலில் கன்னட படங்களில் பணியாற்றிய சாக்ஷி அதன் பிறகு தமிழ் சினிமாவில் வாய்ப்பு கிடைக்க ஆரம்பித்தது. இதனிடையே கமல்ஹாசன் தொகுத்து வழங்கிய பிக் பாஸ் நிகழ்ச்சியில் போட்டியாளராக கலந்து கொண்டு தமிழ் சினிமா ரசிகர்களின் மனதை கவர்ந்தார்.

ஒரு சில திரைப்பட வாய்ப்புகள் அவருக்கு கிடைக்க தொடங்கியதை தொடர்ந்து தமிழ் சினிமாவில் நடித்து வந்தார். இதனிடையே அட்லீ இயக்கத்தில் 2013 ம் ஆண்டு வெளியான "ராஜா ராணி" திரைப்படத்தில் ஒரு சிறிய கதாபாத்திரத்தில் சாக்ஷி அகர்வால் நடித்திருந்தார். அவருடைய நடிப்பில் "கெஸ்ட்" மற்றும் "தி நைட்" என்கின்ற இரு திரைப்படங்கள் விரைவில்வெளியாகஉள்ளது.மேலும்விஸ்வாசம்,சிண்ட்ரல்லா,அரண்மனை3,காலாஉள்ளிட்டதிரைப்படங்களிலிலும் இவர் நடித்துள்ளார்.

இவர் அடிக்கடி இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வீடியோ மற்றும் கவர்ச்சியான புகைப்படங்களை பதிவிட்டு வருகிறார். இந்த நிலையில் உடற்பயிற்சி செய்யும் வீடியோவை பதிவிட்ட சாக்ஷி அகர்வால், இதே போன்று வொர்க் அவுட் செய்து, என்னை டேக் செய்யுங்கள் என தலைப்பிட்டிருந்தார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் டிரெண்டாகி வருகிறது.

## டி20 உலகக்கோப்பை இறுதிப்போட்டி: விராட் கோலி இத்தனை ரன்கள் அடிப்பார் மான்டி பனேசர்



20 அணிகள் கலந்து கொண்ட டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் அமெரிக்க மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் லீக் சுற்று மற்றும் சூப்பர் 8 சுற்று ஆட்டங்கள் முடிவில் இந்தியா, ஆப்கானிஸ்தான், தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

அரையிறுதி ஆட்டங்களில் முறையே தென் ஆப்பிரிக்க அணி ஆப்கானிஸ்தானையும்,இந்தியஅணிஇங்கிலாந்தையும்வீழ்த்திஇறுதிப்போட்டிக்கு முன்னேறின. இந்நிலையில் டி20 உலகக்கோப்பை யாருக்கு என்பதைதீர்மானிக்கும் மாபெரும் இறுதிப்போட்டி நாளை நடைபெறுகிறது.

பார்படாஸில் நாளை நடைபெறும் இறுதிப்போட்டியில் இந்தியா தென் ஆப்பிரிக்கா அணிகள் மோத உள்ளன. இந்நிலையில் இந்த தொடரில் ரன்கள் அடிக்க மிகவும் சிரமப்பட்டு வரும் விராட் கோலி நாளை நடைபெற உள்ள இறுதிப்போட்டியில் 100 ரன்கள் அடிப்பார் என இங்கிலாந்து முன்னாள் வீரர் மான்டி பனேசர் தனது கருத்தை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, நாளை நடைபெறும் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெற்று கோப்பையை வெல்லும். இந்த ஆட்டத்தில் விராட் கோலி 100 ரன்கள் அடிப்பார் இவ்வாறு அவர் கூறினார்.

## பெண்கள் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் சாதனைப் படைத்த ஸ்மிருதி மந்தனா ஷபாலி வர்மா ஜோடி




இந்தியா தென்ஆப்பிரிக்கா பெண்கள் அணிகளுக்கு இடையிலான ஒரேயொரு போட்டி கொண்ட டெஸ்ட் தொடர் இன்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் தொடங்கியது. டாஸ் வென்ற இந்திய அணி பேட்டிங் தேர்வு செய்து விளையாடி வருகிறது.

இந்திய அணியின் தொடக்க வீராங்கனைகளாக ஷபாலி வர்மா ஸ்மிரிதி மந்தனா ஆகியோர் களம் இறங்கினர். இருவரும் சிறப்பாக விளையாடி சதம் விளாசினர். இந்தியா 292 ரன்கள் எடுத்திருக்கும்போது இந்த ஜோடி பிரிந்தது. ஸ்மிரிதி மந்தனா 161 பந்தில் 149 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். முதல் விக்கெட்டுக்கு இந்த இணை 292 ரன்கள் குவித்தது. இதன் மூலம் இந்த இணை பெண்கள் டெஸ்ட் கிரிக்கெட்டில் சாதனை ஒன்றை படைத்துள்ளது.

இதற்கு முன்னதாக பெண்கள் டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் விக்கெட்டுக்கு 250 ரன்களுக்கு மேல் அடித்தது கிடையாது. தற்போது 292 ரன்கள் விளாசி மந்தனா ஷபாலி வர்மா ஜோடி புதிய சாதனைப் படைத்துள்ளது.

## கோபா அமெரிக்க கால்பந்து தொடர்: அமெரிக்காவை வீழ்த்திய பனாமா அணி



உலகக்கோப்பை,யூரோகோப்பைகால்பந்து தொடருக்கு அடுத்து புகழ்பெற்ற கோபா அமெரிக்க கால்பந்து தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடர் கடந்த 1916ம்ஆண்டுமுதல்நடத்தப்பட்டுவருகிறது. இந்த தொடர் வரும் ஜூலை 15ம் தேதி வரை நடைபெறுகிறது. இந்நிலையில் இந்த தொடரில் நடைபெற்ற ஒரு ஆட்டத்தில் அமெரிக்கா மற்றும் பனாமா அணிகள் மோதின. இந்த போட்டியின் முதல் பாதி ஆட்டம் 11 என்ற கோல் கணக்கில் சமனில் முடிந்தது. இதையடுத்து விறுவிறுப்பாக நடைபெற்ற 2ம் பாதி ஆட்டத்தில் அபாரமாக ஆடிய பனாமா அணி மேலும் ஒரு கோல் அடித்து 21 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. இதையடுத்து அமெரிக்க வீரர்கள் கோல் அடிக்க எடுத்த முயற்சிகளுக்கு பலன் கிடைக்கவில்லை. இறுதியில் இந்த ஆட்டத்தை 21 என்ற கோல் கணக்கில் பனாமா அணி வென்றது.

## டி20 உலகக்கோப்பை அரையிறுதி: இந்திய அணியில் சிறந்த பீல்டர் விருது வென்ற ரிஷப் பண்ட்



கடந்த 1ம் தேதி தொடங்கிய 9வது டி20 உலகக்கோப்பை தொடர் இறுதிக்கட்டத்தை எட்டிவிட்டது. இன்னும் இறுதிப்போட்டி மட்டுமே எஞ்சியுள்ளது. இறுதிப்போட்டியில் இந்தியா தென் ஆப்பிரிக்கா அணிகள் பலப்பரீட்சை நடத்த உள்ளன.

இதில் நேற்று நடைபெற்ற 2வது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இங்கிலாந்து அணிகள் மோதின. இதில் 68 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி இந்தியா இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ளது.

அதன்படி கயானா நகரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த இந்தியா 20 ஓவர்களில் 171 ரன்கள் குவித்தது. இந்திய அணியில் அதிகபட்சமாக ரோகித் 57 ரன்கள் குவித்தார். இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக கிறிஸ் ஜோர்டன் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து, இந்திய அணியின் அபார பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 103 ரன்களில் சுருண்டது. அதிகபட்சமாக ஹாரி புரூக் 25 ரன்கள் அடித்தார். இந்திய அணியில் அதிகபட்சமாக குல்தீப் யாதவ் மற்றும் அக்சர் படேல் தலா 3 விக்கெட்டுகளும், பும்ரா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தி அசத்தினர்.

முன்னதாக ஐ.சி.சி. தொடர்களில் ஒவ்வொரு போட்டியிலும்சிறந்துவிளங்கும்இந்தியபீல்டருக்கு பி.சி.சி.ஐ. விருது வழங்கி கவுரவித்து வருகிறது.

அதன்படி நேற்று நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் சிறந்த பீல்டராக இந்திய விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு இந்த விருதை இந்திய முன்னாள் வீரரான தினேஷ் கார்த்திக் வழங்கி கவுரவித்தார். ரிஷப் பண்ட் இந்த விருதை பெறுவது 2வது முறை என்பது குறிப்பிடத்தக்கது.



பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கட் செய்தலிற் றீது

**விளக்கம்:**

பலர்முன்னேபயனில்லாதசொற்களைச் சொல்லுதல்,நண்பரிடத்தில்அறம்இல்லா செயல்களைச் செய்தலை விடத் தீமையானதாகும்.

## ஈஸ்ட்போர்ன் டென்னிஸ் : அமெரிக்க வீரர் டெய்லர் பிரிட்ஸ் அரையிறுதிக்கு முன்னேற்றம்



ஈஸ்ட்போர்ன் சர்வதேச டென்னிஸ் போட்டி இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.இதில் இன்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அமெரிக்க வீரர் டெய்லர் பிரிட்ஸ், சீனாவைச் சேர்ந்த ஷாங் ஜங்செங்குடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய பிரிட்ஸ் 76 (75), 76 (75) என்ற செட் கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். அரையிறுதியில் ஆஸ்திரேலிய வீரர் அலெக்சாண்டர் வுகியுடன் பிரிட்ஸ் மோதுகிறார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.